ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 4 | மார்ச் 1999 | கானம் : 8

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 4 மார்ச் 1999 கானம் : 8

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர்-40 | 5 |
| 3. | பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் நாமாவளி | 6 |
| 4. | நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 21 | 9 |
| 5. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 10 |
| 6. | வேத கதைகள்-22 | 12 |
| 7. | எந்தரோ மஹானுபாவுலு - 10 | 14 |
| 8. | ஸத்ஸங்கத்தின் ப்ரபாவம் | 23 |
| 9. | பாலகர்களுக்கு ஒரு கதை - 16 | 27 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 43 | 29 |
| 11. | செய்திகள் | 31 |
| 12. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |






மேலே : ஸமீபத்தில் நடைபெற்ற, ப்ரஸதானத்ரய பாஷ்ய பாராயணஸதஸில் வித்வான்களுடன் நம் ஸ்வாமிகள்.

கீழே : நாமஸங்கீர்த்தன மேளாவில் ஒரு காட்சி.

ஶ்ரீ ஹரி:

# ஶ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : நவரஸ கானடா தாளம் : ஆதி

பல்லவி

*தாக்ஷிண்யம் குருமே தாக்ஷாயணி*
*அசிந்த்ய மம குணதோஷௌ (தாக்ஷிண்யம்)*

அனுபல்லவி

*தக்ஷயஜ்ஞ விநாஶிநி*
*பக்ஷிவாஹனஸோதரி பரம கல்யாணீ (தாக்ஷிண்யம்)*

சரணம்

*ஸ்கந்தஜனனி ஸுகந்தவேணீ*
*ஶ்ரீ சக்ரவாஸினி சந்த்ரஶேகரகாமினி*
*தவனோத்ஸவப்ரியே தானவநாஶினி*
*முரளீதரநுத மஹிஷாஸுரமர்த்தினி (தாக்ஷிண்யம்)*

அறிவிப்பு :

1. இதுவரை மதுரமுரளியில் வெளிவந்த ஶ்ரீ ஸ்வாமிகளின் கேள்வி பதில்கள், "ஶ்ரீ ஸ்வாமிகளின் அருளுரைகள்" என்ற தனி புத்தகமாக வெளி வந்துள்ளது.

   விலை ரூ. 20/-. சென்னை 'ப்ரேமிகபவன'த்தில் கிடைக்கும்.

2. To know more about mission activities and satsang events Visit :

   http://members.tripod.com/~madhuramurali to know more.

   The English Spiritual Magazine "Madhura Murali" Jan '99 issue is now available on Web.



ஸமீபத்தில் ஒரு நாள், ஸ்ரீ ஸ்வாமிகளிடம் ஸம்பாஷித்துக் கொண்டிருக்கும்பொழுது, அவர், "மஹாத்மாக்களுக்கு அவர்கள் செய்யும் பாபமோ புண்ணியமோ எதுவும் அவர்களை ஒட்டாது" என்று கூறினார். அதற்கு நான், "உலகத்தில் எந்த ஒரு காரியத்திற்கும் அதற்கான பலன் வந்துதான் சேரும் என்பதை தாங்களே ஒரு முறை கூறியுள்ளீர்கள். ஞானிகளின் திருஷ்டியில் வேண்டுமானால் பாபம், புண்ணியம் என்ற இரண்டும் கிடையாது என்பது உண்மை. அதுபோலவே, அவர்கள் மனோநாசம் அடைந்தவர்களாக இருப்பதால், எந்த காரியத்தை அவர்கள் செய்தாலும், செய்யாதவர்களே என்பதும் உண்மைதான். அப்படி இருக்கையில், அவர்கள் செய்த பாபம் அல்லது புண்ணியம், இந்த கர்மாக்களின் பலன் என்னவாகும்?" என்று வினவினேன்.

நம் ஸ்வாமிகள் அதற்கு பதிலளிக்கையில், "மஹாத்மாக்கள் அநேகமாக பாப காரியங்களில் ஈடுபடவே மாட்டார்கள். பலவிதமான புண்ய காரியங்களை செய்து வரலாம். அவர்களிடம் ஏதாவது பாப கர்மாவின் பலன் இருக்குமானால் அது அவர்களை தூஷிப்பவர்களைச் சென்றடையும். புண்ணிய கர்மாக்கள் இருக்குமானால் அவர்களை கொண்டாடுபவர்களைச் சென்றடையும்" என்று சொல்லிவிட்டு, "க்ருஷ்ண பக்தர்கள் ஏன் மிகவும் ஸந்தோஷமாகவும் ஸௌக்யமாகவும் இருக்கிறார்கள் தெரியுமா?" என்று கேள்வி கேட்டு அவரே பதிலும் அளித்தார்.

உலகத்தில் புண்ணிய கர்மாக்களிலேயே மிகவும் ஶ்ரேஷ்டமானது கோ ஸம்ரக்ஷணம்தான். பகவான் கோபாலனோ, தான் பிறந்தது முதல் தன் வாழ்க்கை முழுவதும், கோ ஸம்ரக்ஷணத்தையே ப்ரதானமாக கொண்டதால் மகத்தான புண்ணிய பலனை சேர்த்து வைத்துள்ளான். அவனோ பூர்ண ப்ரஹ்ம ஸநாதனமாக இருப்பதால் இவைகளினால் அவனுக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை. அந்த புண்யங்கள் அனைத்தும் அவனை ஸேவிப்பவர்களை அடைவதால் க்ருஷ்ண பக்தர்கள் ஸௌக்யமாகவும் ஸந்தோஷமாகவும் உள்ளனர். ***எத்தனை பக்தர்கள் அவனை அண்டினாலும் அவர்கள் அனைவரையும் க்ஷேமமாக வைக்கக்கூடிய மஹத்தான புண்ணியபலன் அவனிடம் இருக்கிறது"*** என்றார்.

இவை மிகவும் ரஸமாக இருப்பதால் எழுதுகிறேன்.

(தொடரும்)

**-ஜயந்தி ஜானகிராமன்**

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் நாமாவளி

॥ ஸ்ரீ ஹரி: ॥

**॥ ஸ்ரீ மாதுரிஸகீ ஸமேத ப்ரேமிகவரத மூர்த்தயே நம:**
**ஸ்ரீ ஸ்ரீநிவாஸபரப்ரம்ஹணே நம: ॥**

ஓம் ஸ்ரீமத்முரளீதராஸ்மதாசார்யாய நமோ நம:
ஓம் அகாராதிக்ஷகாரார்த்த தத்வஜ்ஞாய நமோ நம:
ஓம் அனந்தகுணகணைகமண்டலாய நமோ நம:
ஓம் அனந்தானந்த ஸந்தோஹ ஶோபிதாய நமோ நம:
ஓம் அன்னதானாதிஸத்கர்மநிரதாய நமோ நம:
ஓம் அநேகதர்மாசரணைக ஸத்யத்னாய நமோ நம:
ஓம் அநேகஶிஷ்யஸத்கோஷ்ட விலாஸாய நமோ நம:
ஓம் அருணாசல ஸத்குருஸ்வரூபாய நமோ நம:
ஓம் அருணாசலஸச்சரித்ர போதகாய நமோ நம:
ஓம் அவ்யாஜகருணாபூர்ணஹ்ருதயாய நமோ நம:
ஓம் அவித்யாக்ரந்திநிர்பேத நிபுணாய நமோ நம:
ஓம் ஆசார்யபத்யாSSசரணதத்பராய நமோ நம:
ஓம் ஆத்மபோதேந்த்ரபோதேந்த்ர ஸச்சிஷ்யாய நமோ நம:
ஓம் ஆத்மானுபூதிநிமக்ன ஸந்துஷ்டாய நமோ நம:
ஓம் ஆஸ்திக்யஞானவைராக்ய வர்தகாய நமோ நம:
ஓம் ஆஶ்ரிதாபீஷ்டதானைகசதுராய நமோ நம:
ஓம் இச்சாத்வேஷவிஹீனாத்மஸ்வரூபாய நமோ நம:
ஓம் ஈஶாத்யுபநிஷத் ஸாரரஸஜ்ஞாய நமோ நம:
ஓம் உத்தவாதிமஹாபக்தபூஜகாய நமோ நம:
ஓம் ஏகீக்ருதானேகபக்தஸங்கமாய நமோ நம:

ஓம் ஐஶ்வர்யஜ்ஞானமாதுர்யஶரீராய நமோ நம:
ஓம் ஓங்காரமந்த்ரதத்வார்த்த நிபுணாய நமோ நம:
ஓம் ஔதார்யாதிஸத்குணைகநிலயாய நமோ நம:
ஓம் கடலூர்க்ஷேத்ரஸம்பூதபாஸ்கராய நமோ நம:
ஓம் கருணாரஸஸம்பூர்ணஸுநேத்ராய நமோ நம:
ஓம் கல்பிதானேகந்யாஸாதிநிலயாய நமோ நம:
ஓம் கஸ்தூரீதிலகோத்பூதஸுபாலாய நமோ நம:
ஓம் காஞ்சீஸ்வாமிக்ருபோபாத்த ஸம்ஞானாய நமோ நம:
ஓம் காமக்ரோதாதிஷட்வர்கரஹிதாய நமோ நம:
ஓம் க்ருஷ்ணப்ரேமரஸாஸ்வாத குஶலாய நமோ நம:
ஓம் க்ருஷ்ணபக்திப்ரசாரைக கங்கணாய நமோ நம:
ஓம் காயத்ர்யாதிமஹாமந்த்ர ஸுஸ்திதாய நமோ நம:
ஓம் கீதகோவிந்தகாவ்யாதிப்ரவீணாய நமோ நம:
ஓம் கீதாஶாஸ்த்ராதிதத்வார்த்த ஸாரக்ஞாய நமோ நம:
ஓம் குருமண்டலஸத்பூஜாநிமக்னாய நமோ நம:
ஓம் குருவர்யபாதுகாத்யாராதகாய நமோ நம:
ஓம் கோதாதிஸுபக்தாஶ்ரிதஜீவனாய நமோ நம:
ஓம் கோவிந்தசரணத்வந்த்வபூஜகாய நமோ நம:
ஓம் கனபாராயணப்ரீதஸுமனஸ்காய நமோ நம:
ஓம் சதுர்வர்கஸம்ரக்ஷணதீக்ஷிதாய நமோ நம:
ஓம் சதுர்வேதஶாஸ்த்ரப்ருந்த போஷகாய நமோ நம:
ஓம் சந்தனாகருலிப்தாங்கபூஷணாய நமோ நம:
ஓம் சந்த்ரஶேகரபாதாப்ஜமதுபாய நமோ நம:
ஓம் சாத்ரஸந்தேஹநீஹாரபாஸ்கராய நமோ நம:
ஓம் ஜடாபாராயணாக்ருஷ்ட ஹ்ருதயாய நமோ நம:
ஓம் ஜபானுஷ்டானஸத்கர்மநிரதாய நமோ நம:

| | | |
|---|---|---|
| ஓம் | ஜயேதராநபிக்ஞுபரிஶ்ரமாய | நமோ நம: |
| ஓம் | ஜராமரணரோகாதிநிர்லேபாய | நமோ நம: |
| ஓம் | ஜீவிதானேக பக்தைகஜீவனாய | நமோ நம: |
| ஓம் | ஜ்ஞானபக்திக்ருபாபூர்ணபாஜனாய | நமோ நம: |
| ஓம் | ஜ்ஞானைஶ்வர்யஸுபக்த்யாதிவரதாய | நமோ நம: |
| ஓம் | தப:ஸித்தஸர்வவித்யா ப்ராவீண்யாய | நமோ நம: |
| ஓம் | திதிக்ஷாதிகுணோபேதஶரீராய | நமோ நம: |
| ஓம் | திரஸ்க்ருதாஶேஷலோகஸுகாய | நமோ நம: |
| ஓம் | தீர்த்தயாத்ராஸத்கார்ய நிஷேவகாய | நமோ நம: |
| ஓம் | துச்சீக்ருதஶரீராங்கஸுகாய | நமோ நம: |
| ஓம் | துலாமாஸாப்தநிஸ்துலஜனனாய | நமோ நம: |
| ஓம் | தூலாஜ்ஞானவிஹீனாத்ம ஸ்வரூபாய | நமோ நம: |
| ஓம் | தம்பாஸுயாதிதுர்தோஷவிரதாய | நமோ நம: |
| ஓம் | தாஸபக்தமஹத்ஸேவாSதிஸக்தாய | நமோ நம: |
| ஓம் | திவ்யஜ்ஞானஸம்பூர்ணமத்யரத்னாய | நமோ நம: |
| ஓம் | திவ்யதேஶரக்ஷணைகநிரதாய | நமோ நம: |
| ஓம் | து:கபீதஜனத்ராணவல்லபாய | நமோ நம: |
| ஓம் | தூரீக்ருதாஶேஷமோஹநிகராய | நமோ நம: |
| ஓம் | த்ரவிடாசார்யஸதுக்திபாஜனாய | நமோ நம: |
| ஓம் | த்ரவிடஶ்ருத்யம்ருதாப்தி நிமக்னாய | நமோ நம: |
| ஓம் | தேஶகாலாபரிச்சின்னஸ்வரூபாய | நமோ நம: |
| ஓம் | தேஹாபிமானநிர்முக்தஶரீராய | நமோ நம: |
| ஓம் | தர்மாபிவர்தனைகஸுநிஷ்டிதாய | நமோ நம: |

(தொடரும்)

- ப்ரஹ்மஸ்ரீ P. கோபாலக்ருஷ்ணன்

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 21

## அவிட்டம்

அவிட்ட நக்ஷத்ரகாரரின் தவிட்டு பானைகளில்கூட தனம் என்ற அளவிற்கு உயரிய ஐஶ்வர்யத்தைத் தரக்கூடிய நக்ஷத்ரம் அவிட்டம்.

வஸுக்களை தேவதையாகக் கொண்ட நக்ஷத்திரம் இது. ஐந்து நக்ஷத்திரங்களால் குயவனின் சக்கரம் போன்ற ரூபத்துடன் ஆகாயத்தில் அடையாளம் காட்டப்படுகிறது. ஐப்பசி மாதம் 21-ம் தேதி முதல் கார்த்திகை மாதம் 3-ம் தேதி முடிய மாலையில் நக்ஷத்ர உதய காலத்தில் காணலாம் என்று வான ஶாஸ்த்ரக்ஞர்கள் கூறுகிறார்கள்.

உயரிய ரதங்களில் ஶங்க சக்கரங்களை தரித்து க்ரீடங்களுடன் இந்த நக்ஷத்ர தேவதை ப்ரகாசிக்கிறார். இந்த நக்ஷத்ரத்தில் பிறந்தவர்கள் பெரிய தனவந்தர்களாக இருப்பார்கள். விவகாரங்களில் புகுந்து தங்களது பராக்ரமத்தை காட்ட விரும்புவார்கள். ஸாமான்யமாக பணத்தை கொடுக்க மாட்டார்கள். மிகவும் பரிசீலித்து, ஸமயங்களைப் பார்த்துதான் கொடுப்பார்கள். ஸங்கீதத்தில் நாட்டம்கொண்டால் இவர்கள் மிகவும் முன்னேறுவார்கள். அனேகமாக இவர்களில் பலர் கண் அழகு கொண்டிருப்பார்கள். சுறுசுறுப்பு இவர்களுக்கு மிகவும் குறைவு. தன்னைக் காட்டிலும் கீழ்மட்டத்து ஜனங்களிடத்தில் அதிகம் ஈடுபாட்டைக் காட்டுவார்கள்.

தயவு என்னும் குணம் இவர்களிடம் தேடும்படியாக இருக்கும். எப்பொழுதும் இவர்கள் கூட்டத்துடன் இருக்கவே விரும்புவார்கள். தன்னை சுற்றி இருப்பவர்களுக்கு உதவுவார்கள். நல்ல சேர்க்கையை இவர்கள் பெற்றால் மிகவும் முன்னேறிவிடுவார்கள். இவர்களுக்கு கெட்ட சேர்க்கைக்கு வாய்ப்புகள் அதிகம் இருப்பின், இவர்களைக் கண்டு அஞ்ச வேண்டியதாகிவிடும். இவர்களிடம் மாட்டிக்கொண்டால் ஸாமான்யமாக விடமாட்டார்கள். இவர்கள் ஆஞ்சநேய ஸ்வாமியை உபாஸித்தார்களே யானால் மிகவும் மேன்மையை அடைவார்கள். ■

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : சிலர், தங்களுடைய குருநாதர் ஶாஸ்த்ரங்களில் உள்ள அனுஷ்டானத்தை பின்பற்றிக்கொண்டு அதிலிருந்து, இம்மியும் வழுவாமல் அதன்படிதான் நடப்பார் என்று குணமாக கொண்டாடுகின்றனர். மற்றும் சிலர், தங்களுடைய குருநாதர் எந்தவிதமான ஜாதி வித்யாஸத்தையும் பார்க்கமாட்டார் என்று அதை குணமாக கொண்டாடுகின்றனர். இதில் எது சரி?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஒரு விஷயம் சரி என்பதற்கும், தவறு என்பதற்கும் ஶாஸ்த்ரமே ப்ரமாணம். யுக்தியினால் பலவற்றை ஸ்தாபிக்கலாம். ஆனால் அவை சரியாகாது. அவரவர்களுக்கு தோன்றிய வகையில் ஶாஸ்த்ர விஷயத்தை திரித்துச் சொல்லவும் கூடாது. ஜீவன்முக்தர்களான ஞானிகள், எந்த ஶாஸ்த்ர ஸம்ப்ரதாயத்திற்கும் கட்டுப்படவேண்டிய அவசியமில்லை என்பதால் அவர்கள் செய்வது அனைத்தும் ஶாஸ்த்ர ஸம்மதமே.

*கேள்வி : நான் ஸமீபத்தில் ஒரு கோவிலுக்குச் சென்றிருந்தேன். அங்கு உள்ள சில தூண்களில் மிகவும் ஶ்ருங்காரமான சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தன. ஒரு ஆலயத்தில் இவை மாதிரியான சிற்பங்கள் செதுக்க வேண்டியதன் காரணம் என்ன?*

பதில் : நீங்கள் ஆலயத்திற்கு செல்லும்பொழுது இவை மாதிரியான சிற்பங்களைப் பார்க்க நேரிட்டும், உங்கள் மனது விகாரப்படாமல் இருக்குமேயானால் உள்ளே சென்று ஸ்வாமியை தரிசனம் செய்யலாம். இல்லையென்றால் நீங்கள் திரும்பிச் சென்றுவிடலாம் என்பதே அதன் காரணம்.

*கேள்வி : நான் ஒரு ஆலயத்திற்குச் சென்று த்யானம் செய்யலாம் என்று சென்றிருந்தேன். அங்கு ஒரே ஸப்தமாக இருந்தது. அங்கு நிலவும் சூழ்நிலை, த்யானம் செய்வதற்கு அனுகூலமாக இல்லையே, ஏன்?*

பதில் : நம்முடைய மதத்தில் ஆலயங்கள் த்யானம் செய்வதற்கான இடம் அல்ல. ஸ்வாமிக்கு, ஒரு மஹாராஜாவை போன்ற ஸகல விதமான

உபசாரங்களும் நடைபெற ஏற்படுத்தப்பட்டவைகளே ஆலயங்கள். உங்களுக்கு த்யானம் செய்ய ஆவல் இருக்குமேயானால் ஸமுத்ர கரைகளிலோ, மலைப்ரதேசங்களிலோ ஏதாவது ஆஶ்ரமங்களிலோ சென்று த்யானம் செய்யலாம். அவைகளே அதற்குரிய இடங்களாகும்.

*கேள்வி : சில மஹான்கள் பரவச நிலையில் பக்தர்களைத் தொடும்பொழுது சில விசேஷமான அனுபவங்கள் ஏற்படுவதாக கூறுகின்றார்களே. இதன் விசேஷம் என்ன?*

பதில் : மஹான்கள் சாதாரணமாக நம்மைத் தொடுவதே நமக்கு விசேஷம்தான். பரவச நிலையில் நம்மைத் தொடுவது ஒரு விசேஷ அனுக்ரஹம். ஆனால் அவையெல்லாம் ஶாஸ்வதமானவைகள் அல்ல. தோன்றி மறையக்கூடியவையே.

---

*வ்யாலம் பாலம்ருணாலதந்துபி:*
*அஸௌ ரோத்தும் ஸமுஜ்ஜ்ரும்பதே*
*சேத்தும் வஜ்ரமணிம் ஶிரீஷகுஸும*
*ப்ராந்தேன ஸன்னஹ்யதே ।*
*மாதுர்யம் மதுபிந்துனா ரசயிதும்*
*க்ஷாராம்புதே: ஈஹதே*
*நேதும் வாஞ்சதி ய: கலான்*
*பதி ஸதாம் ஸூக்தை: ஸுதாஸ்யந்திபி: ॥*

ஒரு மத யானையை மென்மையான தாமரைத் தண்டினால் கட்டிப்போட முயற்சிப்பது எப்படியோ, ஒரு வைரத்தை ஶரீஷப் பூவினால் பட்டை தீட்டுவது எப்படியோ, ஸமுத்திரத்தில் ஒரு சொட்டு தேனை விட்டு அதன் உப்புத்தன்மையை அகற்றி மதுரமாக்க நினைப்பது எப்படியோ, அப்படி அமுதத்தை தெளிக்கும் தன் நற்சொற்களினால், தீயோர்களை நல்வழிப்படுத்த முயற்சிப்பது.

**- நீதி ஶதகம்**

# வேத கதைகள் - 21

- தர்மக்ஞர், வாங்கமுக ஶார்வபௌம, மேலக்காவிரி
ப்ரஹ்மஶ்ரீ பஞ்சாபகேச ஶாஸ்த்ரிகள்

## யஜ்ஞோபவீதம் (பூணல்)

ஒரு ஸமயம், தேவர்களும் அரக்கர்களும் வேள்வி செய்தனர். வேள்வி செய்து முதலில் ஸ்வர்க்கத்தை அடைவது யார் என்று இவர்களுக்குள் போட்டி ஏற்பட்டது. வேள்வியானது முறைப்படி எவ்வித தோஷமும் இல்லாமல் நன்கு செய்தால்தான் நாம் விரும்பிய பயன் ஏற்படும். இன்று நாம் பயனை கருதி வேதத்தில் கூறப்பட்ட பல கர்மாக்களை செய்தும் நாம் விரும்பிய பயன் நமக்கு கிட்டுவதில்லை. இதற்கு காரணம், ஷட்கர்மாக்களை செய்பவர்களுக்கோ செய்து வைப்பவர்களுக்கோ போதுமான திறமையின்மை, நம்பிக்கையின்மை முதலியவைகளே.

ஸ்வர்க்கம் என்ற பயனை விரும்பி, யாகம் செய்யும் அரக்கர்கள் அவசர அவசரமாக ஒருவித வ்ரதமும் இல்லாமல் யாகம் புரிந்தனர். தேவர்களோ ப்ரும்மசர்யம், தவம் முதலியவைகளை நன்கு கடைபிடித்தனர். ப்ரும்மசர்யம் என்றால் புலன் அடக்கம், பெண் ஆசை ஒழித்தல், எப்பொழுதும் பரம்பொருளில் மனதை நிலை நிறுத்தல், வேதம் ஓதுதல் இவைகளாகும். தவம் என்றால் உண்ணாமல் இருப்பது, சேமித்த பொருளை நல்லோர்க்கு அளிப்பது என்பதாகும். யாகம் செய்பவர்களிடத்தில் இவை எல்லாம் நிலை பெற்று இருக்கவேண்டும். அப்பொழுதுதான் யாகம் செய்வதற்கே தகுதி ஏற்படும்.

அரக்கர்கள் பெண் மயக்கம் கொண்டவர்கள். தவம், ப்ரும்மசர்யம் இவைகள் ஒன்றும் அறியாதவர்களாக யஜ்ஞானுஷ்டானம் செய்தனர். அதனால், அரக்கர்களின் யாகமானது நன்கு செய்யப்படாததாக ஆயிற்று. அதனால் இந்த போட்டியில் தோல்வி அடைந்தனர் அரக்கர்களால், ஸ்வர்க்கத்தை அடையமுடியவில்லை. தேவர்களோ, முற்கூறிய நியமங்களுடன் யஜ்ஞங்களை நன்கு அனுஷ்டித்ததால் அவர்களுடைய யஜ்ஞம் நன்கு நடந்தது. அதனால் ஸ்வர்க்கத்தையும் அடைந்தனர். ப்ரஸ்ருதமான யஜ்ஞத்தால் தேவர்கள் ஸ்வர்க்கம் அடைந்தனர். அப்ரஸ்ருதமான யாகத்தால் அரக்கர்கள் தோல்வி அடைந்தனர்.

ப்ருஸ்ருதம் என்றால் முறைப்படி தயார் செய்யப்பட்ட பூணலை அணிந்து யாகம் செய்வதாகும். பூணல் அணியாமல் செய்த யாகம் அப்ரஸ்ருதம் எனப்படும். ஆதலால் இருபிறப்பாளர்கள் பூணல் முறைப்படி அணிந்தே அத்யயனம் செய்யவேண்டும். அப்பொழுதுதான் யஜ்ஞும் ப்ரஸ்ருதமாகும். வலது கை (தோல்) மேலாகவும், இடது (தோல்) கீழாகவும் இருக்கும்படி இருப்பது உபவீதம் எனப்படும். இதற்கு மாறுதலாக இருப்பது ப்ராசீனாவிதம் எனப்படும். இதை அனுசரித்து தான் ஆபஸ்தம்ப க்ருஹ்யஸூத்ரத்திலும், யஜ்ஞோப வீதிதா என்று கூறப்பட்டு இருக்கிறது.

நாம் கர்மானுஷ்டானம் செய்யும்பொழுது ப்ரும்மசாரியாக இருந்தால் மான்தோலையும், க்ருஹஸ்தனாக இருந்தால் வஸ்த்ரத்தையும் பூணல்போல் போட்டுக்கொள்ள வேண்டும். ■

*ப்ரஸஹ்ய மணிமுத்தரேத் மகர வக்த்ர தம்ஷ்ட்ராந்தராத்*
*ஸமுத்ரமபி ஸந்தரேத் ப்ரசலதூர்மிமாலாகுலம் ।*
*புஜங்கமபி கோபிதம் ஶிரஸி புஷ்பவத் தாரயேத்*
*நது ப்ரதிநிவிஷ்டமூர்க்கஜனசித்தம் ஆராதயேத் ॥*

ஒருவன் ஒரு முதலையின் வாயிலிருந்து ரத்தினத்தை மீட்டு வருவது ஸுலபம்; உயரமான அலைகள் அடிக்கும் ஸமுத்திரத்தைக் கடப்பது எளிது, ஒரு சீறும் பாம்பை கழுத்தில் பூமாலையைப் போல் சுற்றிக் கொள்வதும் எளிது. ஆனால் ஒரு முட்டாளின் தப்பான அபிப்ராயத்தை, எண்ணங்களை மாற்றுவது என்பது முடியாத காரியம்.

*லபேத ஸிகதாஸு தைலமபி யத்நத: பீடயன்*
*பிபேத் ச ம்ருகத்ருஷ்ணிகாஸு ஸலிலம் பிபாஸார்தித: ।*
*கதாசிதபி பர்யடந் ஶஶவிஷாணம் ஆஸாதயேத்*
*ந து ப்ரதிநிவிஷ்டமூர்க்கஜனசித்தம் ஆராதயேத் ॥*

பெரு முயற்சியால் மண்ணிலிருந்து எண்ணெய் எடுத்துவிடலாம். தாகத்தினால் தவிப்பவன், கானல் நீரிலிருந்து கூட நீர் அருந்திவிடலாம். ஒருவன் முயலின் கொம்பைகூட அலைந்து திரிந்து பெற்றுவிடலாம். ஆனால் எக்கருத்தையும் (எந்த நல்ல கருத்தையும்) ஒரு முட்டாளின் மனதிற்குள் புகட்டுவது என்பது மிகவும் கடினம். ஒரு முட்டாளின் தப்பான அபிப்ராயத்தை (எண்ணங்களை) மாற்றுவது என்பது முடியாத காரியம்.

**- நீதி சதகம்**

# எந்தரோ மஹானுபாவுலு - 10

கடல் சூழ்ந்த இந்த மண்ணுலகில், புண்ணிய பூமியான பாரத தேசத்தில்தான் அநேக மஹான்கள் அவதரித்துள்ளனர். இத்தகைய மஹான்கள், அந்தந்த கால கட்ட சூழ்நிலைக்கு ஏற்ப, சீர்குலைந்துள்ள தர்மத்தை நிலைநிறுத்தி, மக்களை நல்வழிப்படுத்தி, ஶாஸ்த்ர ஸம்மதமான பக்தி வேதாந்த மார்க்கங்களை காண்பித்து ஒவ்வொரு ஜீவனும் பிறப்பு இறப்பு சூழலிலிருந்து விடுபட்டு மோக்ஷத்தை அடைய வழிவகுத்து தருகிறார்கள். அப்படிப்பட்ட மஹான்களிலும் ஒரு சிலரே, மஹத்தான ஸித்தாந்தங்களைச் செய்து, அவை நீடித்து நிலைபெற சிஷ்ய பரம்பரையையும் ஸ்தாபித்து, ஜனங்களுக்கு கலங்கரை விளக்கமாய் திகழ்கிறார்கள்.

மஹான்களின் அவதாரம் மக்களின் நன்மைக்காகவே ஏற்படுகிறது. அவர்கள் பூவுலகில் இறங்கிவருவதற்குச் சுயநலமான காரணம் ஏதுமில்லை. லோக ஹிதத்தை மட்டுமே கருத்தில் கொண்டு அவர்கள் எப்போதும் செயலாற்றுவார்கள். இப்பேர்ப்பட்ட மஹான்களின் பெருமையை சொல்லாலோ எழுத்தாலோ வடித்துக் காட்ட இயலாது. எவ்வளவு எடுத்துரைத்தாலும், சொல்லாத பெருமையும் சிறப்புக்களும் மீதமிருந்து கொண்டே இருக்கும்.

பாரதம் செய்த தவத்தினாலும், பாக்கியத்தாலும் இன்றுவரை உலகில் ப்ரஸித்தியாக பேசப்பட்டுவரும் த்வைத, அத்வைத, விஸிஷ்டாத்வைத ஸித்தாந்தங்களை ஸ்தாபித்த முப்பெரும் ஆசார்யர்களாகிய ஸ்ரீமத்வர், ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர் ஆகிய மூவரும் தென்னாட்டில் அவதரித்தார்கள். அவர்களுள் ஸ்ரீ ராமானுஜர், தமிழ்நாட்டில் ஸ்ரீபெரும்புதூரில் அவதரித்து, பக்தியையும் வேதாந்தத்தையும் அற்புதமாக இணைத்து, வேதப் பரம்பரையை பின்பற்றி, மக்களுக்கு நல்வழி காட்டிய மாபெரும் மஹானாவார்.

இவர் மாபெரும் கருணைக்கடல். தனது பெருங்கருணை எனும் ஆயுதத்தாலேயே, நாஸ்திகர்களையும், பேத புத்தியுள்ளவர்களையும், வேதாந்தத்தைப்போலவே காணப்படும் இதர பொய்த்தத்துவங்களால் குழம்பி, பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணை மறந்து வாழும் ஜனங்களையும் திருத்தி, வைஷ்ணவ ஸாம்ராஜ்யத்தை நிறுவி, அதன் சக்ரவர்த்தியாக திகழ்ந்தவர்.

மேலும், தனது அபார ஞானத்தாலும், மேதா விலாஸத்தாலும், வ்யாஸஸூத்ரங்களுக்கு பாஷ்யம் எழுதி, உலகத்தை புரட்டு வாதங்களிலிருந்து திருப்பி, ''பாஷ்யகாரர்'' எனும் தனிப்பெரும் புகழ்வாய்ந்த திவ்யநாமமும் பெற்றவர். பகவானைப் போலவே அனைத்து உயிர்களுக்கும் கருணை காட்டி வையத்தை வாழ்விக்க வந்த ஸ்ரீ ராமானுஜரின் திவ்யசரித்ரம் பற்றி தெரிந்துகொள்வது, மனிதனாய் பிறந்த ஒவ்வொருவருக்கும் அவசியமாகும்.

சென்னைக்கு தென் மேற்கில் சுமார் முப்பது மைல் தொலைவில் உள்ள ஸ்ரீபெரும்புதூர் என்ற வளமான ஊரில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆஸூரிகேசவாசாரியர் என்ற அந்தணர் வாழ்ந்து வந்தார். அவரது மனைவியின் பெயர் காந்திமதி. கேசவாசாரியர் வேள்விகள் இயற்றுவதில் மிகுந்த ஊக்கம் கொண்டவர். இந்த தம்பதிகளுக்கு திருமணமாகி பல ஆண்டுகளாகியும் மகப்பேறு இல்லாமல் இருக்க, கேசவாசாரியர் கவலையுற்று மகவைப்பெறும் நோக்கத்துடன் திருவல்லிக்கேணி என்ற பொய்கைக்கரையிலுள்ள வ்ருந்தாரண்யம் என்ற புண்ணிய தலத்தில் உறையும் ஸ்ரீபார்த்தசாரதி எம்பெருமானை வந்தடைந்தார். அங்கேயே அவர் மகப்பேற்றுக்காக வேள்விகளை இயற்றினார்.

யாகம் முடிந்தபின்பு, பார்த்தசாரதி பெருமான் கேசவாசாரியர் கனவில் தோன்றி, ''உனது உறுதியான பக்தியையும் நல்ல ஒழுக்கத்தையும் கண்டு நான் களிப்படைந்தேன். நானே உனக்கு மகனாகப் பிறப்பேன் என்று சொல்ல, மிகவும் ஆனந்தமடைந்த கேசவாசாரியர் ' தனது மங்களமான கனவை மனைவியிடம் கூறினர். மறுநாளே அவர்கள் ஸ்ரீபெரும்புதூருக்கு பயணமானார்கள். சுமார் ஓர் ஆண்டுக்குப்பின்னர், பாக்கியவதியான காந்திமதிஅம்மாள், எல்லா சுபலக்ஷணங்களும் பொருந்திய தேஜோமயமான திவ்யமங்கள விக்ரகமாய் ஜொலிக்கும் அழகிய ஆண் குழந்தையை, கலி ஆண்டு 4118, கி.பி. 1017, சித்திரை மாதம் 12ம் தேதி சுக்லபட்ச பஞ்சமியில் வியாழக்கிழமை அன்று ஈன்று எடுத்தாள். அவரது ஜன்ம நக்ஷத்திரம் திருவாதிரை.

ஹாரித கோத்ரத்தைச் சேர்ந்த அஸூரி கேசவாசாரியருக்கும் காந்திமதிக்கும் திருமகனாய், உலகத்தை உய்விக்கவும் வேதங்களின் உண்மைப் பொருளை விளக்கவும், பெரிய அரசுகளால் கூட செய்ய இயலாத ஸமத்துவத்தையும், புரட்சிகளையும், விளைவிக்க வந்துதித்த ஆதிசேஷனுடைய அம்சமான ஸ்ரீராமனுஜரது அவதாரம் மற்றவர்களுக்குப்

புதிதானாலும் அவரது தந்தையான ஸோமயாஜிக்கு, பகவான் தமது தேவியிடத்தில் புத்திரனாக பிறப்பான் என்று ஏற்கனவே தெரியுமாதலால், அவர் பகவானின் அருளை நினைத்து மேலும் சந்துஷ்டியின் எல்லையை அடைந்தார். உடனே அவர் தனது மைத்துனரான பெரிய திருமலைநம்பிக்கு இந்த சுப செய்தியை தெரியப்படுத்தினார்.

பெரிய திருமலைநம்பி என்பவர் ஸ்ரீ ஆளவந்தாரின் மனத்துக்கினிய சீடர்களில் ஒருவர். திருவேங்கடமுடையானுக்கு ஸேவை செய்வதே தமக்குக் கடமையென தன் வாழ்நாளை ஏழுமலையானின் பணியிலேயே கழித்து வந்தார். அவருக்கு இரு சகோதரிகள். ஒருவள் காந்திமதி, கேசவ ஸோமயாஜியின் பத்னி. மற்றொருவள மழலைமங்கலம் கமல நயனபட்டரின் பத்னி த்யுதிமதி. தனது சகோதரிக்குப் புத்திரபாக்கியம் ஏற்பட்டது பற்றி அளவில்லா ஆனந்தம் அடைந்த பெரிய திருமலைநம்பி குழந்தையை உற்று நோக்கி பரவசமடைந்து, "இவன் ஸாமான்யனில்லை. ஒரு மஹான் அவதரித்துள்ளான். இவனது திருமுகத்தில் இளைய பெருமாளைப் போல் கைங்கர்யலக்ஷ்மியின் ஜொலிப்பு வெளிப்படுகிறது. ஸர்வலக்ஷண ஸம்பன்னனான இவன் ஸகல ஶாஸ்த்ரங்களையும் அதிகரிப்பான்" என ஆசீர்வதித்து லக்ஷ்மணன் (ராமானுஜன்) என பெயரிட்டார்.

பிறகு ஸோமயாஜி தமது புதல்வனுக்கு, உரிய காலத்தில் அன்ன ப்ராசனம், சௌளம், உபநயனம் முதலியவற்றை செய்வித்தார். அவரே சிறந்த வேதவேதாந்த அறிவுடையவராதலால் தானே லக்ஷ்மணனுக்கும் வேத பாடங்களை சொல்லலானார். ஸ்ரீ ராமானுஜர் அபாரமான அமானுஷ்யமான அறிவு உள்ளவராக இருந்ததால் பதினைந்து வயதுக்குள்ளேயே வேதவேதாந்தங்கள் அனைத்தையும் கற்றுணர்ந்தார். அவரது பதினாறாவது வயதில் அவருக்கு தஞ்சமாம்பாள் என்ற பெண்ணை அவருடைய பெற்றோர்கள் திருமணம் செய்து வைத்தனர். ஸ்ரீராமானுஜர் க்ருஹஸ்தாஶ்ரமத்தில் புகுந்த ஒரு மாதத்திலேயே கேசவாசாரியர் நோய்வாய்ப்பட்டு பரமபதம் அடைந்தார். தந்தையை இழந்த ராமானுஜர் சிறிது காலம் துயருற்றபோதிலும், தமது ஆன்மவலிமையினால் அதை ஸஹித்துக்கொண்டு அமைதியுற்று அன்னையையும் தேற்றினார். பிதாவின் அந்திமக்ரியைகள் நடந்தபின்பு, ஸ்ரீ ராமானுஜரும் அவரது அன்னையும் ஸ்ரீபெரும்புதூரை விட்டு காஞ்சீபுரத்துக்கு இடம் பெயர நிச்சயித்தனர். எனவே காஞ்சியில் ஒரு வீடு கட்டிக்கொண்டு குடும்பத்துடன் அங்கே குடி புகுந்தனர்.

அந்தக் காலத்தில், காஞ்சிபுரத்தில் சிறந்த அடியார்கள் மதித்துப் போற்றிய, திருக்கச்சிநம்பி என்ற பெரிய பக்தர் வாழ்ந்து வந்தார். அவர் தினந்தோறும் காஞ்சியிலிருந்து, அருகிலுள்ள பூவிருந்தவல்லிக்குச் சென்று அங்கிருந்து நறுமணமுள்ள பூக்கள், பழுத்த சுவையுள்ள கனிகள் ஆகியவற்றை சேகரித்து கொணர்ந்து தமது உளங்கவர்ந்த காஞ்சிவரதனுக்கு அர்ப்பணிப்பார். அவர் வைகுந்தத்திலிருந்து, பேரருளாளனுக்கென்று பணியாற்றவே வந்தவர் என பலரும் கருதினர். வேளாள குலத்தில் பிறந்தவரான திருக்கச்சிநம்பி, காஞ்சி எம்பெருமானுக்கு ஆலவட்ட கைங்கர்யம் புரிந்து வந்தார். காஞ்சியில் வாழ்ந்த மக்கள் அவரது இனிய பண்புகளாலும் நற்குணங்களாலும் கவரப்பட்டு அவரிடம் பெருமதிப்பு கொண்டிருந்தனர். அவர் தினமும் ஸ்ரீபெரும்புதூர் வழியாக செல்லும் பொழுது ராமானுஜரது இல்லத்து வழியாக செல்வார். சிறுபிள்ளையாயிருந்த ராமானுஜரது முகத்தில் பொலிந்த தெய்வீக ஒளியில் ஈடுபட்டு அவருடன் பழகலானார். ராமானுஜரும் திருக்கச்சிநம்பியிடம் இளம்பிராயத்திலேயே அன்பும் மதிப்பும் கொண்டு பழகலானார்.

காஞ்சிபுரத்துக்கு குடிபெயர்ந்த ராமானுஜர், அருகிலுள்ள திருப்புட்குழியில், யாதவப்ரகாசர் என்ற ஏகதண்டி (அத்வைத) ஸன்யாசி, வேதாந்த பாடங்கள் சொல்லி கொடுப்பதாகக் கேள்வியுற்று, அவரிடம் பாடம் கேட்கத் தீர்மானித்தார். யாதவப்ரகாசரும் ஓர் அரிய மேதாவி. அத்வைத ஸித்தாந்தத்தில் தீவிரமான பற்றுடையவர். ஶாஸ்த்ர அறிவைப் பெறுவதற்கு மிக்க ஆர்வம் கொண்ட ராமானுஜர் அவரது மாணவரானார். புதிய மாணவரின் அழகிய வடிவையும் முக ஒளியையும் கண்டு யாதவ ப்ரகாசர் மிகவும் மகிழ்ந்தார். சிறிது காலத்திலேயே ராமானுஜர், ஆசிரியரின் ப்ரிய மாணவரானார்.

ஆனால் இந்த ப்ரியம் வெகுநாள் நீடிக்கவில்லை. ராமானுஜர் பரமனிடம் பக்தி நிறைந்தவர். பரமனது தொண்டிலேயே மிகவும் நாட்டமுடையவர். அவருக்கு யாதவப்ரகாசரின் அத்வைத கொள்கைகள் மீது விருப்பம் ஏற்படவில்லை. ஆசிரியரிடம் கொண்ட மதிப்பினால் அவரது உபதேசங்களிலுள்ள குறைகளை எடுத்துக்காட்ட ராமானுஜர் துணியவில்லை. சில சமயம் அப்படிச் செய்ய விரும்பினாலும் தம்மைத் தாமே அடக்கிக்கொண்டார்.



ஒருநாள் காலைப் பாடங்கள் முடிந்து மற்ற மாணவர்கள் வீடு திரும்பியதும் யாதவப்ரகாசர் தமது ப்ரிய சீடரான ராமானுஜரைத் தமது உடலில் எண்ணை தேய்த்துவிடச் சொன்னார். அப்பொழுது இன்னொரு மாணவனும் உடன் இருந்து, காலையில் நடந்த சாந்தோக்ய உபநிடத பாடத்தின் முதல் அத்தியாயம் ஆறாவது பகுதி ஏழாவது மந்த்ரத்தின் முதலில் வரும் ''கப்யாஸம்'' என்ற சொல்லின் பொருளை மீண்டும் தெளிவாக உரைக்குமாறு விண்ணப்பித்துக் கொண்டான். கப்யாஸம் என்பதற்கு குரங்கின் ப்ருஷ்டபாகம் என்று பொருள்கொண்டு யாதவ ப்ரகாசரும், ''அந்தப் பரமனின் இரண்டு கண்களும் குரங்கின் ப்ருஷ்டபாகம் போல் சிவந்த தாமரைமலர் போன்றவை என்று அர்த்தம் கூறினார்.

இந்த பொருந்தாத இழிந்த உவமையைக் கேட்டதும் இயல்பிலேயே பக்தியினால் மென்மையான உள்ளம் கொண்ட ராமானுஜரது இதயம் பாகாய் உருகியது. கண்களிலிருந்து நீர் சுடுநீராகத் தலும்பி யாதவப்ரகாசரின் துடையில் தீப்பொறிபோல் விழுந்தது. வெப்பமான கண்ணீரின் ஸ்பரிசத்தால் அதிர்ச்சி அடைந்த யாதவப்ரகாசர் உடனே தலைநிமிர்ந்து நோக்கினார். தமது ப்ரியமான மாணவனின் உள்ளத்தை ஏதோ துயரம் உறுத்துகிறது என்பதை தெரிந்துகொண்டு ராமானுஜரின் வருத்தத்துக்கான காரணத்தை அறிய விரும்பினார்.

உடனே ராமானுஜர் கூறலானார். ''ஆசிரியரே! தங்களைப் போன்ற உயர்ந்தவரின் முகத்திலிருந்து இதுபோன்ற பொருத்தமில்லாத விளக்கஉரை வெளிவருவதைக் கேட்டு என் மனம் வேதனை அடைகிறது. ஸகல கல்யாண குணங்களும் பொருந்திய, உலகின் ஸௌந்தர்யத்துக்கெல்லாம் நிதியான பகவானின் திருக்கண்களைக் குரங்கின் ஆசனவாயுடன் ஒப்பிட்டு கூறுவது எவ்வளவு பெரிய பாவமான செயல்! தங்களைப் போன்ற அறிவாளியின் வாயிலிருந்து இத்தகைய சொற்களை நான் எதிர்பார்க்கவில்லை. அதுதான் வருந்துகிறேன்'' என்றார்.

யாதவப்ரகாசர் உடனே, ''மகனே ! உன் அதிகப்ரசங்கித்தனம் எனக்கும் வருத்தத்தை தருகிறது. சரி, நீ இந்த வாக்கியத்துக்கு, இதைவிட உயர்ந்த கருத்தை கூறுவாயா?'' என வினவினார். உடனே ராமானுஜர் உங்கள் ஆசியினால் எதுவும் முடியும் என மிகப்பணிவுடன் தொடங்கி பின்வருமாறு அர்த்த உரையாற்றினார்.

''கப்யாஸம் என்ற சொல்லுக்கு குரங்கின் ப்ருஷ்டபாகம் என்று அர்த்தம் கொள்வதை தவிர்த்து, கப்-ஜலம், பிபதீதி கபி: அதாவது கபி: என்றால் சூரியன், தண்ணீரைப் பருகும் சூரியன், ஆஸம் என்றால் மலர்ந்தது என்றாகும். ஆகவே கப்யாஸம், புண்டரீகாக்ஷம் என்றால் சூர்ய மண்டலத்தின் நடுவில் பொன்போல் ஜொலிக்கும் பகவானுடைய நயனங்கள், அந்த சூர்யனால் மலரும் தாமரையின் இதழ்களை போல் ஒளிர்கின்றன என்று ஆன்றோர்கள் அர்த்தம் கொண்டுள்ளனர். இதைவிட்டு பரம்பொருளின் கண்களுக்கு எங்ஙனம் குரங்கின் பின்பாகத்தை உபமானமாகச் சொல்லலாம்? இது அபசாரம். தேவரீர் கூறியதைக் கேட்க என் மனம் தாளவில்லை'' என்று ராமானுஜர் கூறி முடித்ததும் யாதவப்ரகாசருக்கு கோபம் வந்தது.

எந்த ஶாஸ்த்ரவாக்கியமும் பலவிதமான பொருள்களுக்கு இடமளிக்குமாதலால் அவற்றுக்கு மிகவும் உசிதமான அர்த்தம் கொள்வது தான் மரபும், அழகும் ஆகும். எனவே தான் ஶாஸ்த்ரார்த்தங்களை சரியான குருவின் மூலந்தான் வாசிக்கவேண்டும் என்ற நியதி இருந்துவருகிறது. ஆனால் குருவே வக்கிரமாக இருந்தால் சிஷ்யனும் மேலும் வக்கிரமாவான். இப்படிப்பட்ட நிலையை மீறி தெளிந்த அறிவு பெற, கூரிய மதியும், உசிதமற்ற பொருளை நிராகரிக்கும் திறனும், துணிவும் தேவை. அப்பேர்ப்பட்ட மகான்கள் அவசியமான பொழுதுதான் அவதாரம் செய்வார்கள். அப்படி அவதரித்த ஸ்ரீராமனுஜர் குருவின் விகாரமான விமர்சனத்துக்கு மறுப்பு சொன்னது, யாதவப்ரகாசரின் கோபத்தை தூண்டியதில் வியப்பென்ன?

உடனே அவர், ''நீ சொன்ன இந்த பொருள் நேரிடையான அர்த்தம் அல்ல. பகுதி விகுதிகளைப் பிரித்து பொருள் கூறி உனது இலக்கணப் புலமையை வெளிப்படுத்திவிட்டாய்'' என்று சினந்து கூறினார்.

இன்னொரு நாள் தைத்திரீய உபநிஷத்தில் வரும் ''ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம'' என்ற மந்த்ரத்துக்கான பொருளை யாதவப்ரகாசர் அத்வைதமாக அர்த்தம் பண்ணி இந்த மூன்று அடைமொழிகளும் ப்ரஹ்மம் ஒன்றையே குறிக்கும். மாறுபட்ட எந்த நிலையையும் குறிக்காது என்று சொன்னதும், ராமானுஜர் வகுப்பில் எழுந்து நின்றார். உடனே யாதவப்ரகாசர், என்ன ராமானுஜா, ஏதாவது ஸந்தேகமா, என்று கேட்க, அவர், சந்தேகமில்லை. இந்த உபநிஷத் வாக்கியத்துக்கு தாங்கள் கூறிய விளக்கம் ஒவ்வாது. வேறு வியாக்கியானம் கூறவேண்டும் என்றதும். ''உன் வியாக்கியானத்தை சொல்லேன் கேட்போம்'' என்று சினத்துடன் சொன்னார். ராமானுஜர் விளக்கினார்.

''பரப்ரஹ்மம், சத்தியம், ஞானம், ஆனந்தம் என்ற பண்புகளுடன் கூடியது. இந்தப் பண்புகளையே பரமனாக கொள்வது சரியல்ல. இவை அவனுடையவை. ஆனால் இவைகளே அவனல்ல. இந்த உடல் என்னுடையது. ஆனால் நான் உடலல்ல'' என்றார்.

இந்த விளக்கத்தை கேட்டதும் யாதவப்ரகாசர் கொதித்தெழுந்தார். ''டேய் திமிர் பிடித்த பயலே! என் உரையைக் கேட்க விருப்பமில்லை என்றால் ஏன் இங்கு வீணாக வருகிறாய்? வீட்டுக்குப் போய், உன் சொந்த பாடசாலையை துவங்குவதுதானே. உன் விளக்கம் ஆசாரியார் ஶங்கரரின் கொள்கைக்கு உகந்ததாக இல்லை, நாளை முதல் நீ இங்கு வர வேண்டாம்'' என்று கடிந்து பேசினார்.

ராமானுஜர் இயல்பாக ஆசிரியரிடம் பணிவும், பக்தியும் கொண்டவர். ஆயினும் உண்மைக்கு மாறான பொருளை ஆசிரியர் கூறுகிறார் என மனமார அறிந்ததும், அவரால் மறுத்துப் பேசாமல் இருக்க முடியவில்லை. ஆசிரியர் விரட்டியதும், ராமானுஜர் பள்ளிக்குப் போவதை நிறுத்திக் கொண்டார்.

ஆனால் யாதவப்ரகாசருக்கோ ராமானுஜரின் மேதா விலாஸத்தினால் உள்ளூற பயம் தோன்றலாயிற்று. இந்தப் பிள்ளை என்றாவது ஒரு நாள் அத்வைத கொள்கைகளை மறுத்து தன் கொள்கையை நிறுவுவான். இவனிடமிருந்து எப்படி தப்புவது என கவலை கொள்ளலானார். ப்ரஹ்மம் ஸத்யம், உலகம் மித்யை என்ற கொள்கையை வாக்சாதுர்யத்தால் நிரூபிக்கவல்லவராயிருந்தும் ஆன்மீக ஸாதனைக் குறைவினால் அவரது புலமை வெறும் சொல் ஆடம்பரம் ஆயிற்று.

எப்படியாவது ராமானுஜரைத் தீர்த்துக் கட்டினால்தான், தனக்கு நிம்மதி உண்டாகும் என நிச்சயித்து அதற்கான ஏற்பாடாக, தனது மற்ற மாணவர்களுடன் கலந்தாலோசிக்கலானார். கடைசியில் அனைவரும் காசி யாத்திரை செல்வதாக தீர்மானித்து அங்கு கங்கையில் மணிகர்ணிகா கட்டத்தில் எப்படியாவது ராமானுஜரை மூழ்கடித்து கொலை செய்து விடுவது என தீர்மானம் ஆயிற்று. இப்படிச் செய்தால் நமக்கும் பாவம் வராது, அவனுக்கும் மோக்ஷம் கிடைக்கும் என மெதுவாகக் கூறினார் யாதவப்ரகாசர். ஸக மாணவர்களும் ஒப்புக்கொண்டு ராமானுஜரை மீண்டும் பள்ளிக்கு அழைத்து வரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள்.

மறுநாளே அவர்கள் ராமானுஜரை நாடினார். அவர்களை ராமானுஜர் அன்புடன் வரவேற்றார். சீடர்கள் ராமானுஜரிடம், நீ பள்ளியை விட்டு வந்தபின்பு பள்ளி ப்ரகாசமாக இல்லை. அந்தக்கிழவர் ஏதோ கோபத்தில் உன்னை துரத்தினாலும் இப்பொழுது உனக்கு இழைத்த அநீதியை நினைத்து வருந்துகிறார். உன்னை மீண்டும் பள்ளிக்கு வர பணித்துள்ளார் என்றனர். எவரிடமும் கருணை காட்டும் ஸ்வபாவமுள்ள ராமானுஜர், பள்ளிக்கு திரும்ப ஒப்புக்கொண்டார்.

மறுநாளே திருப்புட்குழி சென்று குருவின் பாதங்களை வணங்கினார். யாதவப்ரகாசர், "ராமானுஜா! நான் கோபத்தில் சொன்னதை எடுத்துக் கொண்டு நீ பள்ளியை விட்டு விலகலாமா" என்று அன்புடன் கேட்டுவிட்டு, ஒன்றும் நடவாதது போல் வகுப்புகளை ஆரம்பித்தார். சில நாட்கள் கழிந்ததும், ஆசிரியர் மாணவர்களிடம் நாமெல்லோரும் காசி யாத்திரைச் சென்று புனித கங்கையில் நீராடி வரலாமா என்றதும், அனைத்து சீடர்களும் ஒத்துப் பாடினார். காசி யாத்திரைக்கு ஏற்பாடுகள் மும்முரமாக நடக்க ஆரம்பித்தன.

ராமானுஜருக்கு கோவிந்தன் என்ற சிற்றன்னை மகன் இருந்தார். இருவரும் ஸம வயதுடையவர்கள். அவரும் காஞ்சியில் ராமானுஜர் குடும்பத்துடன் தங்கி யாதவப்ரகாசரிடம் கல்வி பயின்று வந்தார். இருவரும் இணையாகவே பள்ளிக்கு சென்று வருவார்கள். இருவருக்கும் பரஸ்பரம் மிகுந்த அன்பும், ஒற்றுமையும் நிலவி வந்தது. ராமானுஜர் காசி யாத்திரையில் கலந்துகொள்ள முடிவு செய்தார். உடன் கோவிந்தனும் வருவதாக ஒப்புக் கொண்டு ஒரு நல்ல முகூர்த்தத்தில் யாதவப்ரகாசர் தலைமையில் சிஷ்யப்படையுடன் காசி யாத்திரை துவங்கியது.

சில நாள் பயணத்துக்குப் பிறகு இந்த கோஷ்டி விந்தியமலையின் அடிவாரத்திலுள்ள அடர்ந்த கோண்டாரண்யத்திற்கு வந்து சேர்ந்தது. அங்கே ஜனசந்தடி அறவே கிடையாது. இடமும், பொழுதும் அனுகூலமாக இருப்பதைக் கண்டு ஆசிரியர் தன் சீடர்களை இந்த இடத்திலேயே அவர்களது தீய தீர்மானத்தை செய்து முடிக்கலாம் என்று ப்ரேரணை செய்தார்.

(தொடரும்)
- **ஜயந்தி ஜானகிராமன்**

# ஸத்ஸங்கத்தின் ப்ரபாவம்

- ஸ்ரீ ஸ்வாமிகள்

மனிதர்களைக் காட்டிலும் மேம்பட்டவர்கள் பித்ருக்கள். பித்ருக்களைக் காட்டிலும் மேம்பட்டவர்கள் பூத, ப்ரேத, பிசாசுகள். இவைகள் துர் சக்திகளாக இருப்பினும் மிகவும் பலம் பொருந்தியவர்கள். இவர்களைக்காட்டிலும் மேம்பட்டவர்கள் யக்ஷர்கள், கின்னரர்கள், ஸித்தர்கள், சாரணர்கள். இவர்களைக்காட்டிலும் மேம்பட்டவர்கள் முப்பத்து முக்கோடி தேவர்கள். முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கு மேல் ப்ரஹ்மா போன்ற தேவதைகள். இவர்களுக்கும் மேம்பட்டு பரம்பொருளான நாராயணன் அல்லது ப்ரஹ்மஸ்வரூபம். நாராயணனே பரப்ரஹ்ம ஸ்வரூபமாக இருப்பதால் இரண்டிற்கும் வித்யாஸம் இல்லை.

மனிதர்களுக்குக் கீழே, ஸரீர பலத்தில் நம்மைக் காட்டிலும் கூட இருப்பினும், அறிவில் குறைந்த யானை, சிங்கம், புலி போன்ற ம்ருகங்கள். அதற்கும் கீழே, மாடு, ஒட்டகம், குதிரை போன்ற ம்ருகங்கள். அதற்கும் கீழே ஆடு, பன்றி, கோழி, முயல் போன்ற ம்ருகங்கள். அவற்றிற்கும் கீழே பக்ஷிகள், அதற்கும் கீழே புழு முதற்கொண்டு எத்தனையோ கண்ணுக்கு தெரியாத க்ருமிகள்.

நம்முடைய மனிதப் பிறவியே இவை இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் உள்ளது. ஆனால் நமக்குத்தான் ஸ்வாதந்த்ரியம் உள்ளது. பகுத்து அறியக்கூடிய அறிவும் உள்ளது. இந்த மனிதப்பிறவியை நாம் சரியான வழியில் பயன்படுத்திக்கொண்டோமானால் நாம் தேவர்களாகவும் ஆகலாம். தெய்வமாகவும் ஆகலாம். தவறான முறையில் வாழ்ந்தால் நாம், நமக்குக் கீழ்ப்பட்ட ஜன்மங்களில் ஏதாவது ஒரு ஜந்துவாகப் பிறக்கக்கூடும். நாம் இந்த மனிதப்பிறவியை சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள நமக்கு அவசியம் தேவை, ஸத்ஸங்கம்.

ஸாதுக்களிடம் உபதேசங்களைக் கேட்பது, அதன்படி நடப்பது என்பது ஒரு புறம் இருக்கட்டும். அவர்கள் மீது நாம் வைக்கும் ப்ரியமே நமக்கு மோக்ஷபரியந்தம் ஸாதித்துக் கொடுத்துவிடும். அவர்களிடம் நாம் படும் அபசாரமே நமக்கு ஸர்வநாசத்தை உண்டாக்கிடும். நாமோ ப்ருக்ருதிக்கு வசப்பட்டவர்கள். மஹான்களோ ப்ரக்ருதியை வசப்படுத்தியவர்கள். ஒரு பரம பாவியைப் பார்த்து இவன் ஸ்வர்க்கம் செல்லட்டும் என்று அனுக்ரஹித்தால்கூட ப்ருக்ருதி அதை நிறைவேற்றி விடுகின்றது.

ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸுக்ரீவன் தனது ஸகோதரனான வாலியால் நிராகரிக்கப்பட்டு ராஜ்யத்தை இழந்து, மனைவியை இழந்து, பந்துக்களை இழந்து, நண்பர்களை இழந்து, ஒரு மலையின் மேல் ப்ராணனுக்குப் பயந்து வஸித்து வந்தான். இப்பேர்ப்பட்ட அவலநிலையிலும் அவனுக்கு இருந்த ஒரே ஆறுதல் ஹனுமாரின் ஸத்ஸங்கம்தான். ஹனுமாரின் ஸத்ஸங்கத்தினால் பகவானான ராமரின் ஸங்கம் கிடைத்தது. ஸுக்ரீவன் பகவானான ராமரிடம் ஒரு சில விஷயங்களில் அபசாரபட்டும்கூட ஹனுமாரிடம் ஸுக்ரீவன் கொண்டிருந்த பரம ப்ரேமையால், ராமர் அதை ப்ரீதியாகவே ஏற்றுக்கொண்டார். ராமருடைய ஸங்கத்தினால் ஸுக்ரீவன் மீண்டும் ராஜ்யத்தை அடைந்து, ஸர்வ சொத்துக்களையும் அடைந்து, எல்லா ஸுபிக்ஷங்களையும் அடைந்தான்.

ராவணனுடைய ராஜ்யமான லங்கையைப் பார்த்த அனைவரும் ப்ரமித்துவிட்டார்கள். பார்த்தவர்கள் குபேரபுரியோ, இந்திரனுடைய இந்திரபுரியோ என்று வியக்கும்படி ஸர்வ செழிப்புடன் இருந்தது லங்கை. ராவணனும் பூர்ணமாக வேத அத்யயனம் செய்தவன். அக்னிஹோத்ரங்களை விடாமல் செய்து வந்தான். வீணாகானம் செய்வதில் ஸமர்த்தன். ஸாமகானம் செய்வதிலும் அவனுக்கு நிகர் யாருமில்லை. விடாமல் சிவ பூஜை செய்து வருபவன். சிவனுடைய அருளுக்கு பாத்திரமானவனும் கூட. திடீரென்று ஆகாசத்தில் தோன்றுவது, மறைவது முதலிய ஸித்திகளைப் பெற்றவன். பல்வேறு தேவதைகளிடமிருந்து வரங்களையும்கூட பெற்றிருந்தான். ஸாக்ஷாத் பகவானின் மனைவியான ஸீதையை, தகாத முறையில் கொண்டுவந்து அசோகவனத்தில் வைத்ததன்மூலம், பகவானான ராமரிடம் அபசாரப்பட்டான்.

ஆனால், அப்பொழுதும் அவனுக்கு எந்த கேடும் வரவில்லை. அவன் ஸௌக்யமாகவே இருந்து வந்தான். பிராட்டியைத் தேடி ஹனுமார் லங்கை வந்தார். பரம பாகவதோத்தமரான அவருடைய வாலில் நெருப்பை வைத்தான். அன்றைக்கு ஆரம்பித்தது அவனுக்கு கேடு. ஸர்வ ராஜ்யங்களையும் இழந்து அதன்பின் அவன் மாண்ட கதை அனைவரும் அறிந்ததே.

இதன் மூலம் நாம் கிடைத்தற்கரிய மானிடப் பிறவியை அடைந்துள்ளோம் என்பதை புரிந்துகொண்டு அதை சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இதை படித்துவிட்டு ஸாதுக்களிடம் அபசாரபட்டுவிடுவோமோ என்ற பயம் கொள்ள தேவையில்லை. அறியாமையில் செய்யும் எந்த தவறும் அபசாரமாகாது.

நாம் ஒரு ரயில் வண்டியில் பயணம் செய்து கொண்டிருக்கிறோம். நம் எதிர் வரிசையில் ஒரு ஸாது அமர்ந்துள்ளார். நமக்கு அவர் ஸாது என்பது தெரியாது. நாம் எதிர் வரிசையில் காலை தூக்கி போட்டுக் கொண்டுள்ளோம். ஸமயத்தில் நம் பாதம் அவர் மீது படவும் செய்யலாம். இது அபசாரமாகாது. ஏனென்றால் நாம் செய்வது அறியாமையினாலேயே. இவர் ஒரு ஸாது என்று நமக்கு தெரிய வந்த பிறகும், அப்படி செய்தால் என்ன? என்ற மனோபாவத்துடன் செய்வதுதான் அபசாரமாகும். ஆகவே அபசாரத்தை விலக்கி ஸத்ஸங்கத்தில் இருந்தோமானால் நமக்கு மோக்ஷம் என்பது ஸர்வ நிஶ்சயம். ■

---


*யதா கிஞ்சிச்ஜ்ஞோஜ்ऽஹம் த்விப இவ மதாந்த: ஸமபவம்*
*ததா ஸர்வஜ்ஞோऽஸ்மி இதி அவலிப்தம் மம மன: ।*
*யதா கிஞ்சித் கிஞ்சித் புதஜன ஸகாஶாத் அவகதம்*
*ததா மூர்க்கோऽஸ்மி இதி ஜ்வர இவ மதோ மே வ்யபகத: ॥*

சொற்ப விஷய ஞானம் அடைந்தவுடன், ஒரு வெறிபிடித்த மத யானையைப் போன்று என் மனம், நான் எல்லாம் அறிந்தவன் என்று மமதை கொண்டது. ஆனால் அறிஞர்களின் இணக்கத்தினால் மெல்ல மெல்ல விஷய ஞானங்களை அறிந்தவுடன் நான் ஒரு அறிவிலி என்பதை உணர்ந்து இந்த கர்வமும் அடியோடு அழிந்தது.

*க்ருமிகுலசிதம் லாலாக்லின்னம் விகந்தி ஜுகுப்ஸிதம்*
*நிருபமரஸம் ப்ரீத்யா காதன் நராஸ்தி நிராமிஷம் ।*
*ஸுரபதிம் அபி ஶ்வா பார்ஶ்வஸ்த்தம் விலோக்ய ந ஶங்கதே*
*ந ஹி கணயதி க்ஷுத்ரோ ஜந்து: பரிக்ரஹபல்குதாம் ॥*

துர்நாற்றத்துடன் எண்ணற்ற புழுக்களால் சூழப்பட்ட சதையற்ற ஒரு மனித எலும்பை எப்படி ஒரு நாய் ஆர்வமுடனும், ப்ரியமுடனும் சுவைக்கும் பொழுது, அருகில் தேவேந்திரன் நின்றிருந்தாலும் அது (நாய்) வெட்கப்படுவதில்லையோ, அது போன்று உபயோகமற்ற தன் உடைமைகளின் பால் ஒரு மனிதன் (முட்டாள்) ஆசை வைத்திருப்பது.

**- நீதி சதகம்**



# பாலகர்களுக்கு ஒரு கதை - 16

ஒரு தேசத்தை ஆண்டு வந்த மஹாராஜாவிற்கு ஜோதிடம், ஸகுணம், ஶாஸ்த்ரம் இவைகளில் மிகவும் நம்பிக்கையுண்டு. எந்த ஒரு கார்யத்தையும் நல்ல நேரம், காலம் இவைகளைப் பார்த்துதான் ஆரம்பிப்பான். அரண்மனையின் மாடியில் அவனுடைய படுக்கை அறை இருந்தது. ஒரு நாள், காலையில் கண்விழித்த அரசன், மாடியில் இருந்த ஜன்னல் வழியாக வெளியே வேடிக்கைப் பார்த்தான். ஸமீபத்தில் இருந்த ஒரு குடிசையில், விவசாயம் செய்பவனும் அப்பொழுதுதான் மெதுவாக கண்விழித்து தன் அலுவல்களைப் பார்க்க ஆரம்பித்தான்.

மஹாராஜாவிற்கு அன்று முழுவதும் ஏதோ சோக செய்திகளாகவே வந்து கொண்டிருந்தது. எடுத்த அநேக கார்யங்களும், தடங்கல்களாகவே முடிந்தன. மஹாராஜாவிற்கு மிகுந்த வருத்தம் ஏற்பட்டது. இதற்கெல்லாம் என்ன காரணம் என்று தீவிரமாக யோசிக்கலானான். கடைசியாக நாம் இன்று கண் விழித்த நேரம்தான் சரியில்லை என்று தோன்றியது. யார் முகத்தில் கண் விழித்தோம் என்று ஆழ்ந்து சிந்திக்கலானான். கடைசியாக நாம் அந்த ஏழை விவசாயியின் முகத்தில் முழித்ததே, இன்று ஏற்பட்ட அநேக தடங்கல்களுக்குக் காரணம் என்ற முடிவுக்கு வந்தான். அந்த அதிர்ஷ்டமில்லாத ஏழை விவசாயிக்கு மரண தண்டனை விதித்தான். அவனைப் போல் அதிஷ்டமில்லாதவர்கள் இருப்பது நாட்டுக்கே நல்லதில்லை என்ற முடிவிற்கு வந்தான்.

மஹாராஜாவின் முன் அந்த விவசாயிக்கு சிரச்சேதம் செய்ய எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. மஹாராஜாவுடன் பலரும் தண்டனை நிறைவேறும் ஸ்தலத்தில் இருந்தார்கள். தண்டனை நிறைவேறும் காலத்தில் விவசாயி, தான் செய்த தவறு என்ன என்று வினவினான். மஹாராஜாவும் காரணத்தை எடுத்துரைத்தார். அந்த விவசாயியோ மஹாராஜாவிடம் மிகவும் பணிவுடன், "மஹாராஜா! தாங்கள் கண் விழிக்கையிலேயேதான் நானும் கண் விழித்தேன். நான் கண் விழித்து முதன் முதலில் பார்த்ததும் தங்களைத்தான். என் முகத்தில் கண் விழித்த உங்களுக்கோ வெறும் தடங்கல்கள்தான். தங்கள் முகத்தில் கண் விழித்த எனக்கோ மரணதண்டனை. அப்படியாகில் மிகவும் அதிர்ஷ்டமில்லாதவன் தாங்களா அல்லது நானா? அதிர்ஷ்டமில்லாதவன் ஒரு நாட்டில் ப்ரஜையாகவே இருக்கக்கூடாது என்றால், அதிர்ஷ்டமில்லாதவன் அந்த நாட்டின் மஹாராஜாவாக இருப்பது மட்டும் என்ன நியாயம்?" என்று வினவினான்.

மஹாராஜாவிற்கு பெருத்த அவமானமாகி விட்டது. வெட்கி தலை குனிந்தான். அவனை விடுதலை செய்துவிட்டு இது போன்ற அசட்டுத்தனமான செயல்களையெல்லாம் விட்டொழித்தான் அரசன்.

## நாம ஸங்கீர்த்தனம்

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில், ஒரு நாம ஸங்கீர்த்தன இளைஞர் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழு, ஒவ்வொரு வீடாகச் சென்று "ஹரி நாம ஸங்கீர்த்தனம்" செய்ய சித்தமாக உள்ளது.

"ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே"

என்னும் கலியை நாசம் செய்ய வல்லமை படைத்த மந்த்ரத்தை இரண்டு மணி நேரம் தொடர்ந்து ஜபிக்கப்படும். இதை எல்லா ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் காலை 9 மணி முதல் 11 வரை அல்லது மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நாம ஸங்கீர்த்தனத்திற்கு வரும் குழுவிற்காக எந்த விதமான கட்டணமும் இல்லை. பிரசாத விநியோகமோ, பணச்செலவோ கிடையாது. இதில் ஸ்த்ரீகள், புருஷர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ள தெரிந்தவர்களையும் கலந்து கொள்ளச் சொல்லலாம். இதனை ஏற்பாடு செய்தவர்களுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ள எல்லா விதமான ப்ரச்சனைகளும் தீர்ந்து விடுவது ப்ரத்யக்ஷம்.

இந்த நாம ஸங்கீர்த்தனம், தங்கள் வீடுகளில் செய்ய விருப்பம் உள்ளவர்கள், தங்களின் பெயர், முழு விலாசம், நடத்த விருப்பமுள்ள தேதி, நேரம் (காலை அல்லது மாலை) என்கிற விபரங்களை முன் கூட்டியே கடிதம் எழுதி அதன் உறை மீது "நாம ஸங்கீர்த்தனம்" என்று எழுதி அனுப்பவும். கடிதம் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளவும். தொலைபேசி மூலமாகவோ நேரிலோ ஸ்ரீ ஸ்வாமிகளை தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்.

தபால் மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**

"ப்ரேமிக பவனம்"

24, நேதாஜி நகர், ஜாபர்கான் பேட்டை,

சென்னை - 600 083.

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 43

*கௌதமர் போற்றும் கருணைமாமலையே*
*கடைக்கணித்தாள்வாய் அருணாசலா*

கௌதம மஹரிஷி என்ற மஹாத்மா, அருணாசல மாஹாத்ம்யம் என்ற புராணத்தை எழுதியுள்ளார். அப்புராணத்தில், இந்த மலையின் பெருமைகள் எல்லாம் பேசப்படுகின்றன. அபௌருஷ்யமான வேதம் எப்படி ஸர்வதா ப்ரமாணமோ, அது போலவே மஹாத்மாக்களின் வாக்கும் ப்ரமாணம். மஹாத்மாக்களின் வாக்கை ப்ரமாணமாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் யாது காரணமெனின், அவர்கள் நம்மைக்காட்டிலும் பல மடங்கு பராக்ரமசாலிகளாக இருப்பதே. இன்று அநேகர் கைலாய யாத்ரைக்குச் சென்று கைலாயத்தை தரிசனம் செய்து வருகின்றனர். ஆதிசங்கர பகவத்பாதாளும் கைலாயத்திற்கு யாத்ரை சென்று, அங்கிருந்த சில க்ரந்தங்களையும், சிவலிங்கங்களையும் கொண்டு வந்ததாக சொல்வதுண்டு. அப்படி கைலாய யாத்ரை சென்று கைலாயத்தை தரிசித்து வருவதற்கும் அருணாசலத்தை தரிசனம் செய்வதற்கும் ஒரு வித்யாசம் உண்டு. கைலாயத்தை தரிசிப்பவர்கள் பரமேஶ்வரனின் வீட்டிற்குச் சென்று வருவது போல் ஆகும். ஆனால் அருணாசலேஶ்வரரை தரிசனம் செய்வதோ ஸாக்ஷாத் பரமேஶ்வரனையே தரிசனம் செய்வது போலாகும்.

நாம் ஆத்ம ஸ்வரூபமாக இருந்தும், அஜ்ஞானத்தினால், நம் ஸரீரத்தை எப்படி நாம் என்று அபிமானிக்கின்றோமோ, பரமேஶ்வரனும் இந்த மலையை தானாகவே பாவிக்கின்றார். நமது உடம்பில் ஒன்பது த்வாரங்கள் உள்ளன. அதுபோல் திருவண்ணாமலை க்ஷேத்ரத்தை வந்து அடைவதற்கும் ஒன்பது பாதைகள் உள்ளன. நம்முடைய ஸரீரம் பஞ்ச பூதங்களால் ஆனது. பரமேஶ்வரனுக்கும் பஞ்ச முகங்கள் உள்ளன.

அதில் ஒருமுகம் மேல் நோக்கி உள்ளது. அதற்கு ஊர்த்வ முகம் என்று பெயர். இந்த அருணாசல கிரிக்கும் ஐந்து முகங்கள் உள்ளன. நாம் கிரிப்ரதக்ஷிணம் செய்து வருகையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இதை மிகவும் அழகாக தரிசனம் செய்யலாம்.

"ஸ்மரணேன முக்தி அருணாசலம்" என மரணத்தருவாயில் யார் இந்த அருணாசலத்தை ஸ்மரிக்கிறார்களோ அவர்களுக்கு மோக்ஷம் கிட்டும். இந்த இடத்தில் மோக்ஷம் என்பது ஸாலோக்யத்தையோ ஸாயுஜ்யத்தையோ கூறவில்லை. ஸாக்ஷாத் கைவல்ய மோக்ஷத்தையே தருவதாக, ஸாக்ஷாத் பரமேஸ்வரன் வாக்கு கொடுப்பதாக இந்த புராணத்தில் உள்ளது.

அருணாசல க்ஷேத்ரத்தில் உள்ள புல், பூண்டு, பசு, பக்ஷி இவையாவற்றிலும் சிவ ஸாந்நித்யம் உள்ளது. இன்றும், அயோத்தி, மதுரா போன்ற க்ஷேத்ரங்களுக்கு பக்தர்கள் யாத்ரையாக செல்கின்றார்கள். அநேக ஸாதகர்கள் இந்த க்ஷேத்ரத்திலேயே இருந்து ஸாதனை செய்து வருகின்றார்கள். அதற்கு, அங்கு இருக்கக்கூடிய விசேஷ ஸாந்நித்யமே காரணமாகும். இன்றும், இந்த க்ஷேத்ரங்களுக்கு செல்பவர்களுக்கு ஸ்வப்னத்திலாவது பகவத்தரிசனம் ஏற்படுகிறது.

இதற்கு முன்றைய யுகத்தில் பகவான் அவதரித்த தலங்களில், இன்றளவும் ஸாந்நித்யம் இருந்துவருகிறது. அதனால்தான் ஊத்துக்காடு மஹாகவி போன்றோர்களும், மீரா போன்றவர்களும் ப்ருந்தாவனத்தில் புல்லாகவாவது பிறக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். நாம் பார்க்கும் க்ஷேத்ரம் வேறு. மஹாத்மாக்களுக்கு தெரியக்கூடிய க்ஷேத்ரம் வேறு. அதனால்தான் அவர்களுக்கு, அங்கே அப்பேர்ப்பட்ட ஆகர்ஷணம் ஏற்படுகிறது.

(தொடரும்)

**தொகுப்பு : முரளீதரதாஸன்**

*வரம் பர்வததுர்கேஷு ப்ராந்தம் வனசரை: ஸஹ*
*ந மூர்க்கஜனஸம்பர்க: ஸுரேந்த்ர பவனேஷ்வபி ॥*

தேவர்களின் மாளிகையில் ஒரு அக்ஞானியுடன் வஸிப்பதைக் காட்டிலும் அண்ட முடியாத மலைக் காட்டுப் பகுதியில் ம்ருகங்களுக்கு மத்தியில் வஸிப்பது எவ்வளவோ மேன்மை.

This issues Photos by : Sri R. Kalyanakrishnan

# செய்திகள்

## ஜனவரி 29-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை

சென்னை மயிலாப்பூர், ஸமஸ்க்ருத கல்லூரியில் ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயண ஸதஸ் நடைபெற்றது. பல வேதவித்வான்கள் கலந்து கொண்டனர்.

## பிப்ரவரி 3-ந் தேதி முதல் 8-ந் தேதி வரை

சென்னை மேற்குமாம்பலம் அயோத்யா அஸ்வமேத மஹாமண்டபத்தில், வைதீக பரிபாலன ஸபா சார்பில் நடைபெற்ற மஹாஶிவராத்ரி வைபவத்தில், ஸ்ரீ ஸ்வாமிகள், "பக்த விஜயம்" பற்றி உபன்யாஸம் நிகழ்த்தினார்கள்.

## பிப்ரவரி 6-ந் தேதி முதல் 12-ந் தேதி வரை

சென்னை, மைலாப்பூர், ரஸிக ரஞ்சனி ஸபாவில் அகண்ட "ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே" நாம கீர்த்தனம் காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெற்றது. பக்த பெருமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## பிப்ரவரி 14-ந் தேதி மஹாஶிவராத்ரி

வடவாம்பலம் ஸ்ரீ ஆத்மபோதேந்த்ராள் அதிஷ்டானத்தில் நம் ஸ்வாமிகள் மஹா ஶிவராத்ரியை ஒட்டி அபிஷேகம், ஆராதனை, பூஜை நிகழ்த்தினார்கள்.

## பிப்ரவரி 14-ந் தேதி

நம் ஸ்வாமிகளின் ஆஜ்ஞையின் பேரில் Relief Medical Mission, Chennai - 92, Maithri Educational & Charitable Trust, Chennai - 17, நமது Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83, Rajan Eye Hospital, Chennai - 17 இணைந்து மலைப்பட்டு கிராமத்தில் மூன்றாவது முறையாக இலவச மருத்துவ முகாம் நடத்தினர்.

காலை 10 மணி முதல் மாலை 3 மணிவரை நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் பத்துக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் சேவையில் ஈடுபட்டனர். சுமார் 600க்கு மேற்பட்ட பொது மக்கள் இதில் பயனடைந்தனர்.

இதில் பொது மருத்துவம், குழந்தை, தோல், பல், கண் முதலிய விசேஷ மருத்துவங்களில் பொது மக்களுக்கு இலவச சோதனையும் மருந்தும் அளிக்கப்பட்டது. வெளிநாட்டைச் சேர்ந்த டாக்டர் ஒருவரும், Rajan கண் மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் மோகன்ராஜ் அவர்களும் மற்றும் பலர் சேர்ந்து நடத்திய கண் மருத்துவ முகாம் மிகவும் சிறப்புக்குரியது. முகாமில் சோதனைக்கு கலந்து கொள்ள வந்தவர்களில் 50 பேருக்கு இலவசமாக Cataract அறுவை சிகிச்சை செய்யவும், 50 பேருக்கு இலவசமாக கண்ணாடி வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மலைப்பட்டு கிராமத்தில் பள்ளியிலும், மருத்துவமனையிலும் இந்த முகாம் நடைபெற்றது.

நமது மிஷினைச் சேர்ந்த ஸ்ரீ முருகையன் மற்றும் டாக்டர் முருகுசுந்தரம் மற்றும் ஸமூக சேவகர் ஸ்ரீ R. ஸ்ரீதர் அவர்கள் இந்த மருத்துவ முகாமை செவ்வனே நடத்தினர்.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### பிப்ரவரி 26-ந் தேதி முதல் மார்ச் 13-ந் தேதி வரை

ஸ்ரீ ஸ்வாமிகள் பக்தர்களுடன் பஞ்ச த்வாரகைக்கு யாத்ரை செல்ல இருக்கிறார்கள்.

### மார்ச் 18-ந் தேதி முதல் 24-ந் தேதி வரை

ஸ்ரீ ஸ்வாமிகள் ப்ருந்தாவனம் சென்று வஸந்தோத்ஸவம் கொண்டாட இருக்கிறார்கள்.


| | | |
|---|---|---|
| முன் அட்டைப்படம் | : | ஸமீபத்தில் நம் மிஷன் சார்பில் நடைபெற்ற நாமஸங்கீர்த்தன மேளாவில் நம் ஸ்வாமிகள் |
| பின் அட்டைப்படம் | : | அதே மஹோத்ஸவத்தில் நாம ஸங்கீர்த்தனம் செய்யும் பக்த கோஷ்டியினர். |

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registar of Newspapers for India
R. No. 62828/95

| | | |
|---|---|---|
| வேணு : 4 | மார்ச் 1999 | கானம் : 8 |



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar